தினமலர்
திருநெல்வேலி | 28.9.2020

# புதிய கல்விக்கொள்கை இணைய வழி கருத்தரங்கு

திருநெல்வேலி, செப். 28–

பாளை., சாரதா கல்லூரியில் புதிய கல்விக் கொள்கை குறித்த கருத்தரங்கு நடந்தது.

பாளை., சாரதா கல்லூரியில் என்.எஸ்.எஸ்., சார்பில் புதிய கல்விக்கொள்கை குறித்த இணையவழி கருத்தரங்கு நடந்தது.

கல்லூரி செயலர் யதீஸ்வரி சரவணபவப்பிரியா அம்பா ஆசி வழங்கினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மதுரை தியாகராஜநகர் கல்லூரி பேராசிரியர் அருண் நாகேந்திரன், 'புதிய கல்விக் கொள்கை' பயன்பாடு, வளர்ச்சி மாணவர்களின் அறிவுத்திறன் குறித்து பேசினார். கருத்தரங்கில் கல்லூரி இயக்குனர் சந்திரசேகரன், முதல்வர் மலர்விழி வாழ்த்தி பேசினர். பேராசிரியை லட்சுமி அறிமுக உரையாற்றினார். பேராசிரியை அருணாதேவி வரவேற்றார். பேராசிரியை தனலட்சுமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். பேராசிரியை வெண்ணிமாமலை நன்றி கூறினார்.